பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

01 07 2025 **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு பாரம்பரிய மருத்துவ முறையும், யோகாசனமும் துணை நிற்கும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு தூய்மை எரிசக்தி புரட்சியை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

4. தமிழகத்தில் குற்றங்களை தடுக்கவும், சட்டம் - ஒழுங்கை பராமரிக்கவும் மாநிலத்தில் ஆளும் திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி தேசிய மகளிர் அணித் தலைவர் திருமதி வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

5. விம்பிள்டன் ஓபன் டென்னிஸ் போட்டியில் நாளை நடைபெறும் ஆடவர் இரட்டையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா உள்ளிட்ட நான்கு பேர் விளையாடவுள்ளனர்.

இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த பாரதத்தை 2047-ஆம் ஆண்டுக்குள் எட்டுவதற்கு பாரம்பரிய மருத்துவமுறையும், யோகாசனமும் துணை நிற்கும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் கோரக்பூரில் குரு கோராக்நாத் ஆயுஷ் பல்கலைக்கழகத்தை திறந்துவைத்து பேசிய குடியரசுத் தலைவர், நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகளையும், உடல் ஆரோக்கியத்திற்கான யோகா உள்ளிட்ட பயிற்சிகளையும் இந்த பல்கலைக்கழகம் வழங்கிடும் என்று தெரிவித்தார்.

மக்களின் உடல் ஆரோக்கியத்தை காப்பதில் இந்த பல்கலைக்கழகம் முக்கிய மைல்கல்லாக விளங்கும் என்றும் அவர் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில் கோரக்பூரில் உள்கட்டமைப்பு அபரிமிதமான வளர்ச்சியை பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உத்தரப்பிரதேச ஆளுநர் திருமதி ஆனந்தி பென் பட்டேல், முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய யோகி ஆதித்யநாத், மாநிலத்தில் சுகாதாரம் மற்றும் கலாச்சாரத்தை கோரக்பூர் ஆயுஷ் பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளதாக தெரிவித்தார்.

உலகின் புதிய மருத்துவ சுற்றுலாத்தலமாக கோரக்பூர் மாறும் என்றும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>

சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு உலகில் தூய்மை எரிசக்தி புரட்சியை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சூரியசக்தி குறித்து மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி நாளேடு ஒன்றில் எழுதிய கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், உலகில் எரிசக்தி கட்டமைப்பை சூரியசக்தி மாற்றியமைத்துள்ளதாக கூறியுள்ளார்.

நாட்டின் எரிசக்தி பயணத்திற்கு சூரியசக்தி வலு சேர்த்துள்ளதாகவும் பிரதமர் தமது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

பட்டய கணக்காளர்களின் நிபுணத்துவமும், அனுபவமும் தொழில் நிறுவனங்களுக்கு அத்தியாவசியமானது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பட்டய கணக்காளர் தினத்தை ஒட்டி, அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பட்டய கணக்காளர்கள் வெளிப்படைத்தன்மையுடன் பணியாற்றி ஆரோக்கியமான பொருளாதாரத்தை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தொழில் நிறுவனங்களின் வெற்றிகரமான செயல்பாட்டிற்கு இவர்களது பங்களிப்பு இன்றியமையாதது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

உற்பத்தித்துறையில் சிறப்பு கவனம் செலுத்தி, மேம்படுத்தும் நோக்குடன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, சமூக பாதுகாப்பு அளிக்க ஏதுவாக, வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை செய்தியாளர்களிடம் விளக்கிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இத்திட்டத்தின்கீழ், முதல் முறையாக பணியில் சேருவோருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை ஒருமாத சம்பளம் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்றார்.

கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் விதமாக இரண்டாண்டுகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் குறிப்பிட்ட அவர், உற்பத்தித்துறையில் மேலும் இரண்டாண்டுகளுக்கு இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்கும் என்றும் கூறினார்.

தேசிய விளையாட்டுக்கொள்கை 2025-க்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம், நாட்டின் விளையாட்டுத்துறை மாற்றியமைக்கப்படுவதுடன், விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்க மக்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், உலக அளவில் விளையாட்டுத்துறையில் முன்னிலையில் உள்ள முதல் ஐந்து நாடுகளில் ஒன்றாக இந்தியாவை மாற்றவும் இந்த விளையாட்டுக்கொள்கையில் வகை செய்யப்பட்டுள்ளதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>

மக்கள் சேவையில் பாரத ஸ்டேட் வங்கி முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் பாராட்டு தெரிவித்துள்ளார். இந்த வங்கியின் 70வது ஆண்டு நிறைவை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், 23 ஆயிரம் கிளைகள், 78 ஆயிரம் வாடிக்கையாளர் சேவை மையங்கள், 64 ஆயிரம் ஏடிஎம் மையங்களுடன் பாரத ஸ்டேட் வங்கி இயங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் இந்த வங்கியில் மேற்கொள்ளப்பட்ட டிஜிட்டல் மாற்றங்கள், வாடிக்கையாளர்களுக்கு பெரும் பயனை அளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகள், மகளிர் சுயஉதவிக் குழுவினர், சாலையோர சிறு வியாபாரிகள், சிறு குறு நடுத்தர தொழில்துறையினர் மற்றும் லட்சக்கணக்கான கைவினைஞர்களுக்கு இந்த வங்கி பேருதவியாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

15 கோடிக்கும் அதிகமான ஜனதன் கணக்குகளைக் கொண்டுள்ள இந்த வங்கி, பிரதமரின் விபத்து காப்பீட்டு திட்டம், அடல் ஓய்வூதிய திட்டம் மற்றும் பிரதமரின் ஜீவன் ஜோதி போன்ற திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் வகையில் புதுமையான நடவடிக்கைகளை பாரத ஸ்டேட் வங்கி மேற்கொள்ளும் என்று தாம் நம்புவதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

ரயில் பயணிகளுக்கான ஒட்டுமொத்த சேவையையும் வழங்குவதற்காக **Rail One** என்ற செல்போன் செயலியை ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

ரயில் டிக்கெட் முன்பதிவு, ரயில் சேவை குறித்த தகவல்கள், **PNR** தகவல், பயணத்தை திட்டமிடுதல், ரயில்களில் உணவு சேவை குறித்த தகவல், ரயில்வே உதவி குறித்த தகவல் ஆகியவற்றை இந்த செயலி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ரயில்வே தகவல் கட்டமைப்பு மையத்தின் நிறுவன நாள் நிகழ்ச்சியில் இந்த புதிய செயலியை தொடங்கிவைத்து பேசிய திரு அஷ்வினி வைஷ்ணவ், **Rail One** செயலி மூலம் முன்பதிவில்லா டிக்கெட்டுகளையும் பதிவு செய்து கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

ரயில் பயணிகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற நோக்கில், ரயில்வே அதிகாரிகள் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஆன்ட்ராய்டு செல்போன்களில் ப்ளே ஸ்டோரில் இருந்து இந்த செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ரயில்வேத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

நடப்பு நிதியாண்டில் தாதுக்கள் மற்றும் இரும்பு இல்லா உலோகங்களின் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய சுரங்க அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த ஆண்டில் 52 புள்ளி ஏழு மில்லியன் டன்னாக இருந்த தாது மற்றும் உர உற்பத்தி, நடப்பாண்டில் முதல் இரண்டு மாதங்களில் மட்டுமே 53 மில்லியன் டன் என்ற உற்பத்தி அளவை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துத்தநாகம், சுண்ணாம்பு, பாக்சைடு போன்ற தாதுக்கள் மற்றும் உலோகங்கள் அதிக அளவில் வெட்டி எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அலுமினியத்தின் உற்பத்தி கடந்த ஆண்டைவிட ஒன்று புள்ளி மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் மத்திய சுரங்க அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கை பராமரிக்க திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி தேசிய மகளிர் அணித் தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தமிழகத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருவதாக கூறியுள்ளார்.

காவல் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகளில் லாக்கப் மரணங்கள் தொடர்ந்து நிகழ்வது அதிர்ச்சி அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றங்களை தடுக்கவும், சட்டம் - ஒழுங்கை பாதுகாக்கவும் மாநில அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம் என்று திருமதி வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

ஆகாஷ்வாணி கோடை பண்பலையின் 26-ஆவது ஆண்டு உதய நாள் விழா இன்று கொடைக்கானலில் நடைபெற்றது.

இந்த நிலையம் மக்களின் விருப்பம் மற்றும் தேவைக்கேற்ப தரமான நிகழ்ச்சிகளை வழங்கி வருவதாக இந்த நிலையத்தின் நிகழ்ச்சிப்பிரிவு தலைவர் திரு வெங்கடேசன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

விம்பிள்டன் ஓபன் டென்னிஸ் போட்டியில் நாளை நடைபெறவுள்ள ஆடவர் இரட்டையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா, யுகி பாம்ரி, ஸ்ரீராம் பாலாஜி, ரித்திக் சௌத்ரி ஆகியோர் களமிறங்குகின்றனர்.

------------

சர்வதேச டென்னிஸ் போட்டியில் **Paavanii Paathak** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>